# "நேர்மையான வழியில் அரசு முன்வருமானால் நாம் பேச்சுவார்த்தைக்கு தயாராகவுள்ளோம்"

விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 13 ஜ: அவ்வல் பிறை: 11 இதழ்: 218

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 29-11-1990

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம்

(வடமராட்சி)

"நேர்மையான வழியில் ஸ்ரீ லங்கா அரசு பேச்சுவார்த்தை நடாத்த முன்வருமானால் நாம் எப்பொழுதும் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவுள்ளோம்" என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நவீன சந்தையில் நேற்று முன் தினம் நடைபெற்ற மாவீரர் தின விழாவில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'ஈழத்தமிழர்களின் சுதந்திரத்திற்காக விடுதலைப் புலி

(4-ம் பக்கம் பார்க்க)

மதவாச்சியில்—

## தமிழ் பிரயாணிகள் மீது குண்டர்கள் கத்திக்குத்து

(வவுனியா)

மதவாச்சி புகையிரத நிலையத்தில் நேற்று கொழும்பிலிருந்து வந்த தமிழ்ப் பிரயாணிகள் பலத்த தாக்குதலுக்குள்ளானதாகவும் சிலர் கத்தியால் குத்தப்பட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்தன.

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து புறப்பட்ட 'யாழ்தேவி' ரயில் மதவாச்சியை வந்தடைந்தபோது குண்டர்கள் சிலர் பிரயாணிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டதா

[4-ம் பக்கம் பார்க்க]

★ வடக்கு - கிழக்கிலுள்ள

# நெல் சந்தைப்படுத்தும் சபை கிளைகள் விரைவில் மூடப்படும்

## திருமலை அலுவலகம் பொலநறுவைக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள நெல் சந்தைப்படுத்தும் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகங்கள் விரைவில் மூடப்படவுள்ளன.**

இதற்கான நடவடிக்கைகளில் விவசாய அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள நெல் சந்தைப்படுத்தும் சபை ஈடுபட்டு வருகிறது.

திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள அலுவலகங்கள் மூடப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலையிலுள்ள மேற்படி அலுவலகம் பொலநறுவை பிராந்தியத்துடன் இணைக்கப்படவுள்ளதுடன் மட்டக்களப்பு அலுவலகம் மூடப்படவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முகாமையாளர் அலுவலகத்தையும் மூடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(153)

## 26,000 பிறப்பு, இறப்பு விண்ணப்பங்கள் தேக்கம்

(சித்தன்கேணி)

கடந்த 6 மாதங்களுக்கு மேலாகச் சுமார் 26 ஆயிரம் பிறப்பு இறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள், சான்றிதழ் வழங்கப்படாமல் யாழ். அரசாங்கச் செயலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

யாழ். மாவட்டத்திலுள்ள—

## ஏழு உ. அ. அதிபர்கள் திருமலைக்கு இடமாற்றம்!

(மானிப்பாய்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் ஏழு உதவி அரசாங்க அதிபர்கள் திருகோணமலைக்கு டிசம்பர் 1ம் திகதி முதல் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

55 வயது முடிந்து மீண்டும் சேவையிலுள்ள உதவி அரசாங்க அதிபர்களை டிசம்பர் 1ம் திகதி முதல் திருகோணமலையிலுள்ள மாகாண சபையில் பணிபுரியுமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் இளைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## 27 குடும்பத்திற்கு காணிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தில் ஆனைக்கோட்டையிலுள்ள முள்ளி கிராமத்தில் வசிக்கும் வீடற்ற 27 ஏழைக் குடும்பங்களுக்கு அப்பகுதியில் குடியிருப்பதற்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

க. பொ. த. உயர்தர—

## விசேட பரீட்சைக்கு கல்வி திணைக்களம் ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

வடக்கில் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலை காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஆகஸ்ட் மாதம் நடைபெற வேண்டிய க. பொ. த. உயர்தர பரீட்சைக்குப் பதிலாக விசேட பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சையை எதிர்வரும் 1991ஆண்டு பெப்ரவரி மாதத்தில் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் வட பகுதியைச் சேர்ந்த

(4-ம் பக்கம் பார்க்க)

ஒட்டுசுட்டானில் பொம்மர் குண்டுவீச்சு—

## 9 பேர் பலி; ஐவர் காயம் ஆலயம், பாடசாலை சேதம்

(யாழ்ப்பாணம்)

ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெற்ற விமானத் தாக்குதலினால் 9 பேர் பலியானார்கள். ஐவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் ஒட்டுசுட்டான் பகுதிக்கு வான் மார்க்கமாக வந்த சிறிலங்கா விமானப்படை விமானங்கள், பொதுமக்கள் வாழும் குடி

(4-ம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் பிரதமராக ஜோன் மேயர் தெரிவு

(லண்டன்)

பிரிட்டனின் புதிய பிரதமராக நிதியமைச்சர் திரு. ஜோன் மேஜர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். 'கன்சவேர்டிவ்' கட்சியின் புதிய தலைவராக இவர் தெரிவு செய்யப்பட்டதையடுத்து பிரதமராகியுள்ளார்.

கட்சியின் தலைமை பதவிக்கு இவருடன் போட்டியிட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் திரு. மைக்கல் ஹசட்டைனும் பாதுகாப்பு அமைச்சர் திரு. டக்ளஸ் ஹேட்டும் மூன்றும் கட்டவாக்களிப்பில் விலகிக் கொண்டதையடுத்து

[4-ம் பக்கம் பார்க்க]

## ரூ. 2 1/2 கோடி கப்பலில் வருகிறது

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலுள்ள மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தினால் யாழ். மக்கள் வங்கிக்கு இரண்டரைக் கோடி ரூபா பணம் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

கப்பல் மூலம் இப்பணத்தினை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

(153)

## வவுனியாவில் வீடுகள் சேதம்

(வவுனியா)

வவுனியாப்பகுதியி பலத்த பொம்மர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் வீடுகள், பிரதேச சபைக் கட்டிடங்கள் போன்றன பெரும் சேதத்துக்குள்ளாயின.

(4-ம் பக்கம் பார்க்க)

## முழங்காவிலில்

(யாழ்ப்பாணம்)

பூநகரி, முழங்காவில் பகுதியில் நேற்று முன் தினம் பொம்மரிலிருந்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இப்பகுதிகளை சுற்றி வட்டமிட்ட மூன்று விமானங்கள் தாழப்பறந்து வந்து பொது மக்கள் கூடிநின்ற இடங்களில்

(3-ம் பக்கம் பார்க்க)

# பங்களாதேஷில் மீண்டும் அவசரகால சட்டம் அமுல்

(கராச்சி)

பங்களாதேஷில் எதிர்க்கட்சிகள் நடாத்திவரும்தொடர்ச்சியான கிளர்ச்சியைக் கட்டுப்படுத்த பங்களாதேஷ் அரசு அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

டாக்கா பல்கலைக் கழகத்தில் பேராசிரியர் ஒருவர் ஆயுதப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து சகல பேராசிரியர்களும் பதவிகளை இராஜினுமாச் செய்துள்ளனர். ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிசாருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலில் இருவர் கொல்லப்பட்டனர். நூறுபேர் காயமடைந்தனர்.

இதேவேளையில் அரசின் அடாவடித்தனத்தை கண்டித்துத் தொடர்ச்சியான வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

ஜனுதிபதி எர்ஷாத் தொலைக்காட்சியில் உரையாற்றுகையில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும், நாட்டில் அமைதியைத்தோற்றுவிக்கவும் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்துவதாக அறிவித்தார். (ச)

## மண்மீட்பில் மரணித்த ஈழப் புரட்சி அமைப்பினரும் இந்த மண்ணின் வீரர்களே

### யோகி உரை

(யாழ்ப்பாணம்)

எமது பாரம்பரிய பிரதேசத்தை மீட்டுத் தமிழீழம் அமைக்கும் வரை எமது தேசியக்கொடியாகப் புலிக் கொடியையும் தேசியநாளாக நவம்பர் 27ஆம் திகதியையும் பிரகடனம் செய்துள்ளோம்.

இவ்வாறு நேற்று முன்தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற மாவீரர் வார இறுதி நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் யோகரத்தினம் யோகி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

அண்மையில் கலைக்கப்பட்ட ஈழப்புரட்சி அமைப்பில் செயலாற்றி இந்த மண்ணின் விடுதலைக்காக போராடி தமது உயிரைத்தியாகம் செய்த இந்த இயக்கப் போராளிகளையும் மாவீரர்களாக ஏற்றுக் கொண்டு அவர்களையும் இந்த நாளில் நினைவு கூருவது எமது கடமையாகும்.

ஈழப் புரட்சி அமைப்பின் தலைவராக இருந்த திரு. பாலகுமாரன் அந்த அமைப்பைக் கலைத்துக்கொண்டதும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முழுமையாக இணைந்து செயற்படத் தீர்மானித்ததும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். பதவிக்காக எமது விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் தலைமைத்துவங்கள் கொண்ட இந்தகால கட்டத்தில் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் முற்றுமுழுதாகஒத்துழைப்புச் செய்ய ஏற்றுக் கொண்டதை நாம் வரவேற்கிறோம் என்ருர். (153)

# வடமராட்சியில் உள்ளூர் உற்பத்தி கண்காட்சி!

வடமராட்சி மாவீரர் தின உள்ளூர்உற்பத்திக் கண்காட்சியை கரும்புலி மில்லரின் தாயார் திருமதி எஸ். மிக்கல்ப்பிள்ளை பனம் ஓலையிலான நாடாவை பன்னவேலைகளுக்குப் பயன்படுத்தும் சத்தகக் கத்தியினுல் வெட்டி திறந்து வைத்தார். வீரமரணமடைந்த போராளி 'சுந்தரின்' தந்தை திரு. எஸ். சின்னத்தம்பி மங்கல விளக்கினையும் ஏற்றிவைத்தார்.

வடமராட்சி தமிழீழ உள்ளூர் உற்பத்தி ஆய்வு நிறுவன பொறுப்பாளர் ரவி ஆரம்ப உரையினை நிகழ்த்தியதுடன் கண்காட்சி ஆரம்பமானது.

இயற்கையுடனுனதும் சுலபமாக விவசாயம் செய்வதற்கான வழிமுறைகள் பற்றி விவசாயப் பகுதியில் நன்கு விளக்கமளிக்கப் பட்டிருந்தது.

ஆயுர்வேத மூலிகைவகைகள் பற்றியும் அதன் சிறப்புப்பற்றியும் இன்றைய கஷ்டமான காலத்தில் அறிந்து கொள்வது மிகவும் அவசியம் என்பதால் அதற்குப் பொறுப்பானவர்கள் நன்கு விளக்கம் கொடுத்தார்கள்.

### பன்னவேலைப்பகுதி

பன்னவேலைப்பகுதி சிறப்பாக அமைந்திருந்தது. இதனுடன் உழைக்கும் மக்களின் உள்ளூர் உணவு ஊக்குவிப்புப் பொருட்களும் வைக்கப்பட்டிருந்தது டன் பனம் பொருள்களினுலான சகல உணவுப் பொருட்களும் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தது.

துர்க்கா நிறுவனம் இன்றைய எரிபொருள் தட்டுப்பாட்டைக் கருத்தில்கொண்டு இரட்டைச்சூட்டடுப்பை அறிமுகம் செய்திருந்தது மக்கள் பாராட்டைபெற்றுள்ளது.

### முறைசாராக் கல்விபிரிவு

வடமராட்சி முறைசாரக் கல்விப்பிரிவுகளான தேவரையாளி இந்துக்கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர மகளிர் பாடசாலை பங்கு பற்றியிருந்தன. இதில் தேவரையாளி கல்விப்பிரிவு, மரவேலைத்தளபாடங்களையும் தையல் வேலை, தட்டச்சு முறைகளையும் விளக்கத்துடன் விளக்கியிருந்தார்கள். இதில் தட்டச்சு முறையிலான விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனி உருவத்தினை வரைந்திருந்த தேன்மொழி என்ற மாணவிக்கு பலரின் பாராட்டும் கிடைத்திருந்தது.

அடுத்து உள்ளூர் உற்பத்திப் பானங்கள் காணப்பட்டது. அங்கே எதிர்காலத்தில் தமிழ் மக்களின் தேவையை பூர்த்தி செய்யும் விதத்தில் பானங்களின் தரம், விலை இருந்தது.

இறுதியாக இயற்கையான பசளையினை எவ்விதம் பயன்படுத்தவேண்டும் என்னும் பிரிவிற்கு வந்தபோது இலை, எரு, உமி, மரத்தூள் போன்றவைகளைப் பயன்படுத்திப் பலன் பெறும் முறைபற்றி அதன் பொறுப்பான மாணவிகள் கொடுத்த விளக்கம் பாராட்டும்படி அமைந்திருந்தது.

இன்றைய நெருக்கடியான காலத்தில் இப்படி ஒரு சிறப்பான உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு கண்காட்சி இடம் பெறுவது பாராட்டக்கூடியதே. (51)

- எஸ். சுந்தரலிங்கம் -


வரி விளம்பரம்

விற்பனைக்கு

விசேட முறையில் தயாரிக்கப்பட்ட புழுக்கொடியல்மா, பச்சை ஓடியல்மா தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள அண்ணு கோப்பிக்கடை யாழ்ப்பாணம்.

(எ-895)

A/L 90, 91, 92

விஞ்ஞான பாடங்கள்

ஆரம்பம்: 02 - 12 - 90 முதல்

காலை 9 மணிக்கு

(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)

New Master Institute

BMC Lane. - Jaffna.

(ஏ 899)


## காபன்டை ஒட்சைட் வாயு நீருடன் கலந்ததே காரணம்

(லண்டன்)

1987-ல் கமரோன் நாட்டிலுள்ள நியோன் நீர்வீழ்ச்சியில் விஷவாயு வெளியேறியமையால் ஆயிரத்தி எழுநூறு பேர் பலியாகியதற்கான காரணத்தைக் கண்டுபிடிக்க பன்நாட்டு விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் முதல்கட்ட ஆய்வின்படி பாறைகளிலிருந்து வெளியேறிய கரியமில வாயு தான் நச்சுத்தன்மை கொண்டதாக மாறி ஆயிரக்கணக்கான மக்களையும், லட்சக்கணக்கான கால்நடைகளையும் பலி வாங்கியதாக அறிவித்துள்ளனர். இதுபற்றிய ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது. (ச)

## நிர்வாகிகள்

(மாங்குளம்)

அல்வாய் வடக்கு மகாத்மா சனசமூக நிலையத்தின் 1991 ம் ஆண்டு நடப்புவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: ந. தேவராசா, உப-தலைவர்: பொ. தங்கவடிவேல், இணைச்செயலாளர்கள்: கே. வாமதேவன், ப. தவராசா, பொருளாளர்; சண் பாரதிதாசன் மற்றும் ஏழுபேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (150)

## இராசி பலன்

29-11-1990

வியாழக்கிழமை

துவாதசி இரவு 9-00 மணி வரை; ரேவதி மு. ப. 8-28 வரை; சித்தாமிர்தம் இராகு காலம் பகல் 1-43 முதல் 2-43 வரை: நல்லநேரம் காலை 7-43 முதல் 9-13 வரை.

மேடம்; எடுத்த காரியம் வெற்றி, களிப்பு மிகுதி, தொழில் பாராட்டு, விருந்துபசாரம்.

இடபம்: மனப்போராட்டம், தொழில் பாதிப்பு, குடும்ப மனஸ்தாபம், அலைச்சல் மிகுதி.

மிதுனம்: தொழில் லாபம், பழைய பாக்கி வசூல், குடும்ப மகிழ்ச்சி, வஸ்திர லாபம்.

கடகம்: ஏமாற்றம், வேண்டாத உறவு, தொழில் முயற்சி, குடும்பக் கவலை.

சிங்கம்: கடிதத் தொல்லை, வீண் சச்சரவு. குடும்பப் பிரச்சனை, தொழில் பாதிப்பு, மனச்சுமை.

கன்னி: நோய் வாட்டும், குடும்பத்தில் முரண்பாடு, அந்நியர் தொல்லை, புத்திரர் கவலை.

துலாம்: மனநிறைவானசம்பவங்கள், தொழில் முயற்சி, பயணங்களால் அனுகூலம், கௌரவம்.

விருச்சிகம்: பொருள் வரவு, தாய்வழி உதவி, புதிய சிந்தனை. குடும்பத்தில் சுபகாரியம்.

தனுசு; தொழில் துறைக் கஷ்டம், அதிகாரிகள் சினம். மகிழ்ச்சியான செய்தி, குடும்பப் பிணக்கு.

மகரம்: பழைய பிரச்சனை, அந்நியர் தொல்லை, குடும்பத்தில் மனஸ்தாபம், பணக்கஷ்டம்.

கும்பம்: புதிய பதவி, பொதுத்துறைப் பாராட்டு, மனைமாற்றம், குடும்ப உல்லாசம்,

மீனம்: குறை கேட்டல், வேண்டாத உறவு, குடும்பப் பிரிவு, சகோதரர் உதவி, காரியத்தடை.

ஜோஸ்யர்.

## வைத்திய சேவை

ஆள் அணி பணம் புகழ் உடல்வாகு உள்ளளவும் மனிதன் ஆடி ஓடி பறந்தடிக்கின்ருன். நாலு நாளைக்கு படுக்கையில் விழுந்துவிட்டால் அவனது ஆட்டங்கள் அனைத்தும் ஈடாட்டம் ஆகிவிடுகிறது.

மனித ஜீவன்களின் அவலமான இக்கட்டத்தில் தேடிஓடிப் பணிபுரிய முன்வந்து நிற்பவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே!

பல ஆண்டு காலமாக குறிப்பாககடந்த நான்கு மாதங்களாக நம்மண்ணில் அடிக்கடி படுகாயமடைந்து உயிருக்கு ஊசலாடித் தவித்து நின்ற போராளிகளையும் பொது மக்களையும் பராமரித்து வரும் டாக்டர்கள் தாதிமார் மற்றும் வைத்திய சாலை ஊழியர்களின் வைத்திய சேவை தரத்தில் உயர்ந்தது.

1985-ம் ஆண்டளவில் கிழக்கு ஐரோப்பாவில் மூண்ட சிறிமியா யுத்தத்தின்போது பல்லாயிரக் கணக்கான போர்வீரர்கள் படுகாயமடைந்து, ஆதரிக்கயாருமற்று வேதனையில் துவண்டு கிடந்த வேளையில் புளோறன்ஸ் நைரிங்கேல் என்ற கிறிஸ்தவ கன்னியாஸ்திரியே துணிந்து முன்வந்து இவ் வீரர்களுக்கு பணிவிடை புரிந்து, பலருக்கு உயிர்ப் பிச்சை அளித்தார்.

அவரது அரிய சேவையின் அடிச்சுவட்டைப் பின்பற்றியே தாதியர் சேவை தனிப்புகழ்பூத்து உலகின் மூலை முடுக்குகளில் நிகழும் போர்களிலும் இயற்கை அனர்த்தங்களிலும் படுகாயமடைந்து பலவீனப்பட்டுத் தவிப்போருக்குப் பணிபுரியும் தாதிமார் சேவையாக சர்வதேச மட்டத்தில் வளர்ச்சியடைந்தது.

தாதிமார் சேவை தாயின் சேவைக்கு நிகரானது. தனக்குத்தானே உதவும் தகுதியடையாத பிஞ்சுக் குழந்தையை-பெற்றதாய் பராமரிப்பது போல - வேறு எவருமே பராமரிக்க முடியாது.

படுக்கையில் விழுந்து பலவீனமுற்று துடிக்கும் நோயாளிக்கு வேளா வேளைக்குமருந்தும்கொடுத்தும் மனவேதனைக்கு ஆறுதல் வழங்கியும் தாய்மை உணர்வுடன் பராமரிக்கும் பொறுமை மிகுந்த இவ் அரும் பெரும் சேவை இன்று எம் மண்ணுக்கு அவசியத்திலும் அவசியம்!

தமிழீழ மண்காக்கும் போரில் படுகாயமடைந்து உயிருக்கு ஊசலாடிக்கொண்டும் உடல் ஊனமுற்று தவிக்கும் போராளிகளையும் குண்டு வீச்சு. ஷெல் தாக்குதல், ஹெலி வேட்டுக்களில் குதறப்பட்ட காயங்களுடன் துடிதுடிக்கும் நூற்றுக்கணக்கான மக்களையும் பாசநேசத்துடன் பராமரிக்கும் பெரும் பொறுப்பை மிகக் குறைந்த வசதிகளுடன் ஏற்று நிற்கும் டாக்டர்கள், தாதிமார் மற்றும் ஊழியர்களின் சேவை போற்றப்பட வேண்டியதே!

இச்சேவையில் தம்மை அர்ப்பணித்துள்ள அனைவரினதும் பணிகளுக்கு தமிழ்பேசும் மக்களின் நன்றிக்கடன் என்றும் உண்டு.

- மயூரன்

## "மனித உரிமை மீறல்களுக்கு எதிரான

# ஈழத்தமிழர் ஊர்வலங்களுக்கு மே. ஜேர்மன் மக்கள் ஆதரவு"

### - வண. இம்மனுவல் அடிகளார்

ஐரோப்பிய நாடுகளுக்கு கடந்த இரு மாதங்களாக சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு விட்டு தற்போது யாழ். நகர் வந்திருக்கும் கொழும்புத்துறை சென். சேவியர் குருத்துவக் கல்லூரி அதிபர் வண. பிதா. எஸ். ஜே. இம்மனுவல் உள்நாட்டுப் பத்திரிகையாளரை தமது காரியாலயத்திற்கு அழைத்திருந்தார்.

இலங்கை தமிழ் மக்களின் இன்றைய நிலை பற்றி வெளிநாட்டவர் மத்தியில் என்ன அபிப்பிராயங்கள் நிலவுகின்றது; அவற்றுக்கு தான் என்ன விளக்கங்களை கொடுத்தார் என்பது பற்றி ஆதாரங்களுடன் எடுத்துக்கூறினர்.

ஒரு கத்தோலிக்க மதகுருவானவருக்கு இருக்கவேண்டிய அமைதி, சாந்தம் வண. இம்மனுவல் அடிகளாரின் முகத்தில் குடிகொண்டிருந்தது. ஆனல் தமிழ் மக்கள் இன்று இலங்கையில் மட்டுமன்றி உலகம் முழுவதிலும் படும் வேதனைகள், துன்பங்கள் துயரங்கள் பற்றி எடுத்துரைக்கும் போது அவர் உள்ளத்தில் அடைந்த வேதனை நன்ருக உணரக்கூடியதாகவும் இருந்தது.

வண. பிதா. இம்மனுவல் அடிகளார் ஜேர்மனி, லண்டன், பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ்சர்லாந்து உட்பட வேறு

**"மதகுருவாகிய நாம் மக்கள் துன்பப்படும் காலங்களில் எமது பங்களிப்பை முழுமையாக வழங்கியே ஆகவேண்டும்."**

பலநாடுகளுக்கும் சென்றுவந்தவர்.

ஆசிய ஆயர் மன்றத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாக பிரதம ஆலோசகராக பணியாற்றி வரும் இவர் பிறநாடுகளின் அழைப்புகளை ஏற்று வெளிநாடுகளுக்கு அடிக்கடி சென்று வருவதும் உண்டு.

வண. இம்மனுவல் அடிகளார் வெளிநாடு செல்லும் ஒவ்வொரு தடவையும், இலங்கையில் தமிழ் மக்கள் மீது, சிங்கள அரசும் இழைத்துவரும் அநீதிகள், அட்டூழியங்கள் பற்றி ஆதாரங்களுடன் எடுத்துக்கூறத்தவறுவதுமில்லை.

### கஷ்டமான வேலைகள்

மே. ஜேர்மனியிலேயேகூடுதலாக தங்கியுள்ள அடிகளார்



அங்கு தமிழ் மக்கள் படும் கஷ்டங்கள்பற்றி கூறும்போது மிகவும் மனவேதனை கொண்டவராகக் காணப்பட்டார். அவர் தெரிவித்ததாவது: ஜேர்மன் நாட்டவர்கள்செய்ய முடியாத கஷ்டமான வேலைகளையே, தமிழர்கள் செய்து வருகின்றனர். சமூக சேவை (சோஸல்) பிரிவினர் அகதிகளுக்கென வழங்கும் பணத்தைக் கொண்டும் ஜேர்மன் அரசாங்கத்துக்கு தெரியாமல் மறைமுகமாக வேலை செய்தே அங்கு காலத்தைப் போக்கி வருகின்றுர்கள். ஜேர்மனிக்குள் அகதிகளாக செல்வோருக்கு ஐந்துவருடங்களின் பின்பே வேலைசெய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

### வெளிநாட்டவர்க்கு இடையூறு

இரு ஜேர்மன் நாடுகளும் தற்போது அங்கு ஒன்றிணைந்ததிஞல் வெளிநாட்டவர்களுக்கு வருங்காலத்தில் அங்கு பல இடையூறுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகச் சொன்னர்: ''வெளிநாட்டவர் அனைவரும் வெளியேறு'' (ஒஸ்லாண்டஸ் அலஸ் வெக்) என்று ஜேர்மன் மொழியில் சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டிருப்பதை தான்கண்டதாகவும் கூறினர்.

### ஆர்ப்பாட்ட ஊர்வலம்

மே. ஜேர்மனியில் இலங்கை அரசாங்கத்தின் 'மனித உரிமை மீறல்' செயல்களைக் கண்டித்து தமிழ் மக்களால்அவ்வப்போது நடாத்தப்படும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கு ஜேர்மன் மக்களின் ஆதரவும் ஓர் அளவுக்கு இருக்கின்றது. குறிப்பாக ஜேர்மனியில் இயங்கி வரும் 'கிறீன் பாட்டி' என்னும் இளைஞர்களின் இயக்கத்தின் ஆதரவு கூடுதலாக கிடைத்து வருகின்றது என்ருர்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் அயல்நாடான இந்தியா தலையிட்டபின்பு ஐரோப்பிய

## "ஈழத்தமிழர் பிரச்னையில்"

# இந்தியா தலையிட்ட பின்னர் ஐரோப்பிய நாடுகள் மௌனம்"

நாடுகள் தற்போது மௌனம் சாதிக்கின்றன;

### இந்தியா நிலைமை

இலங்கைத்தமிழர் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் இந்தியா தீவிரமுயற்சி எடுத்து வருகின்றது என்று ஐரோப்பிய நாடுகளின் மத்தியில் பெயர்பெற்ற இந்தியா தற்போது எமது பிரச்சனையில் பாராமுகமாக நடந்துவருவது வேதனைக்குரியது என்றும் அவர் கூறினர்.

'சிங்கள அரசாங்கம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் அடக்குமுறைகள் பற்றி வெளிநாடுகளில் எடுத்து கூறியதாகவும் அவற்றை அந்தந்த நாடுகளின் புதினப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன என்றும் கூறினர்.

''யேசுநாதர் மனிதகுலத்தைப் பாவத்திலிருந்து மீட்பதற்காகவே சிலுவையில் அறையுண்டு மரித்தார். யேசுநாதர் போதனைகள் செய்வதுடன் மட்டும் இருந்துவிடவில்லை. தேவாலயங்களை 'பரிசேயர்' வியாபார ஸ்தலங்களாகப் பாவித்துவந்தமையால் அவர்களைப் சவுக்கால் அடித்துக் கலைத்தார். அதேபோல் மதகுருவாகிய நாம் மக்கள் துன்பப்படும் காலங்களில் எமது பங்களிப்பை முழுமையாக வழங்கியே ஆகவேண்டும்'' என்ருர்.

### இலங்கை கிறிஸ்தவர்கள்

அவர் மேலும் கூறியதாவது இலங்கையில் உள்ள கிறிஸ்தவ மக்களும் இன்று பதற்றத்தின் மத்தியில் தான் வாழ்கிருர்கள். தமிழ் கிறிஸ்தவர்கள் போராட்டத்தின் மத்தியில் வாழ்கின்ருர்கள். சிங்கள கிறிஸ்தவர்கள் அரசாங்கத்துக்கும், புத்தமதத்துக்கும் பயந்து நாட்டில் நடைபெறும் அட்டூழியங்களை வெளி உலகிற்கு எடுத்துக் கூறமுடியாத நிலையிலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் உண்மை நிலையை சரியாக உணரமுடியாத நிலையிலும் இருக்கின்ருர்கள்.

### 40 ஆண்டுகள் அகிம்சை வழியில்

40 ஆண்டுகளாக தமிழ் மக்கள் அகிம்சை வழியிலேயே தமது உரிமைகளைக் கேட்டு வந்தார்கள் அகிம்சையின் புனிதத்தன்மையை உணரமுடியாத சிங்கள அரசாங்கம் அதை அடக்கி ஒடுக்கி வந்தார்கள். அதன் பிரதிபலிப்பாலேயே எமது தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தும் இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டார்கள்.

### 'தேவா'

தமிழ் இளைஞர்கள் அயுதம் ஏந்திவிட்டார்களே என்று பல சிங்கள மதகுருமார் என்னிடம் கவலைப்பட்டுக் கூறினர்கள். நாளடைவில் சிங்கள இளைஞர்களும் ஆயுதம் ஏந்தியபோது சிங்கள மதகுருமார் மௌனம் சாதித்தார்கள், தமிழ் இளைஞர்களின் செயல்பாடும் சரிதான் என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டார்கள் அவர்கள்.

### சிங்கள மக்கள் நம்புவதில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மக்கள் மீது அரசாங்கம் மேற்கொண்டு வரும் விமானத் தாக்குதல்களால் ஏற்படும் உயிர் சேதங்கள் வீடுகள், பாடசாலைகள், தேவாலயங்கள் அழிக்கப்படுவதை பெரும்பாலன சிங்கள மக்கள் நம்புவதாக இல்லை; இவ்வளவு கொடூர செயல்களில் எமது புத்தமத தார்மீக அரசாங்கம் செயல்படாது என்றும் கூறுகின்ருர்கள்; அந்த அளவுக்கு உண்மைநிலைகளை அரசாங்கம் சிங்கள மக்களுக்கு குறிப்பாக சிங்கள கத்தோலிக்க மக்களுக்கு மூடி மறைத்து வருகின்றது.

எமது தமிழ் மக்கள் மீது இளைக்கப்பட்டுவரும் அட்டூழியங்கள் பற்றி நான் வெளிநாடுகளில் எடுத்துக் கூறியது மேலிடங்களுக்கு பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம், ஆனல் அதையிட்டு நான் வருத்தப்படவில்லை. மதகுருவாகிய நான் எனது கடமையையே செய்கின்றேன், எந்த எதிர்ப்புகள் வந்தாலும். அதை யேசுநாதரின் போதனைகளின் வழியில் பொறுமையுடன் சகித்துக் கொண்டு என் பங்களிப்பை தொடர்ந்து அளித்துக் கொண்டே இருப்பேன்'' என அமைதியாகக் கூறினர்.

(வி)

---

# மாவீரர்நாள் செய்திகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ். வீடமைப்புச் செயலகம், யாழ் மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மாவட்டப் பணிமனை ஆகியன அலங்கரிக்கப் பட்டுத் தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டிருந்தன; (54)

### புத்தகக் கண்காட்சி

(வடமராட்சி)

போர்க்காலம் சம்பந்தமான புத்தகக்கண்காட்சியும் புகைப்படக் கண்காட்சியும் வல்வை கல்விமன்றத்தினுல் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது, வடமராட்சியில் பெருந்தொகையான மக்கள் இக் கண்காட்சியைப் பார்வையிடடது குறிப்பிடத்தக்கது; (51)

### மரம்நாட்டு விழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சிற்றூரவை மாவீரர் தினத்தை முன்னிட்டு வீதிகளுக்கு வீரமரணமடைந்த போராளிகளின் பெயர் சூட்டுதல், சிரமதானம் மரம்நாட்டு விழா ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியது:

'மேஜர் தும்பன் வீதி' 'வடிவு வீதி' என்று இரு மறைந்த போராளிகளின் பெயர்களில் வீதிகளுக்கு பெயர் சூட்டப்பட்டு பெயர்ப்பலகை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (72)

### மரங்கள் நாட்டப்பட்டன

(கொழும்புத்துறை)

மாவீரர் தினத்தையொட்டி ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை வீதி திருவள்ளுவர் சேவா மன்ற சனசமூக நிலையத்தினர் தமது பகுதியில் மரக்கன்றுகளை நாட்டினர்.

### வீதிகளுக்கு மாவீரர் பெயர்கள்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை சிற்றூரவை மாவீரர் தினத்தை முன்னிட்டு முக்கிய இரு வீதிகளுக்கு மறைந்த போராளிகளின் பெயர்களை சூட்டியுள்ளது. 'சந்திரன் வீதி' 'ரமேஷ் வீதி' என இரு வீதிகளுக்கு பெயர்ப் பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (72)

### தமிழீழ வரைபடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்-சுழிபுரம் வரையிலான பிரதான வீதிஎங்கும் தொடர்ச்சியாக மாவீரர் நாளையொட்டி பிரமாண்டமான அலங்கார வளைவுகளும், பந்தல்களும் போடப்பட்டிருந்தன. மானிப்பாய் ஆலடிச் சந்தியில் பாரிய அளவிலான தமிழீழ வரைபடம் வர்ணம் தீட்டப்பட்டு வண்ண விளக்குகளால் நிறுத்தப்பட்டிருந்தது.

இதனைப் பெருந்தொகையானோர் வந்து பார்வையிட்டுச் செல்கின்றனர். (54)

### விடியலைத் தேடி விரைகிருேம்

(புலோலி)

வடமராட்சிப் பகுதியில் மாவீரர் வாரத்தையொட்டி நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் பழந்தமிழ்க் கலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப் பட்டு வருகிறது. நிகழ்ச்சிகளின்போது முக்கிய நாடகமாக 'விடியலைத்தேடி விரைகிருேம்'என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. (61)

### சிரமதானமூலம் வீதி திருத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி யாழ் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக இருந்து அரைமைல் தூரத்திற்கு சிரமதானப்பணி மூலம் கூட்டுறவாளர்கள் திருத்தம் செய்தனர். யுத்த விமானங்களினுல் சேதமுற்ற கட்டிடச் சிதறல்களை அகற்றியும், மரங்களை வெட்டியும், குப்பை கூளங்களை கூட்டியும் துப்பரவு செய்தனர். மாவீரர் தினத்தையொட்டி இச்சிரமதானப்பணி நடைபெற்றது.

### தீப்பந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசஅதிபர் திரு. சபாபதிப்பிள்ளை மாவீரர் தீப்பந்த சுட்டிகளை ஏற்றிவைத்தார்.

இவ்வைபவத்தில் கிராம சேவையாளர் உட்பட பல பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### மாவீரர் உருவப்படங்கள்

(புலோலி)

மாவீரர் வாரத்தின் நான்காவது தினத்தில் வடமராட்சிப் பகுதியில் நூற்றுக்கணக்கான மாவீரர்களின் உருவப் படங்கள், அவ்வாருக புலிகளின் இராணுவ அணிவகுப்புப் படங்கள், நாதஸ்வரங்களின் புரட்சிக்கீதங்கள் ஆகியவற்றுக்கு மத்தியில் மாவீரர்களின் பெற்ருேர்களால் திறந்து வைக்கப்பட்டன.(61)

### வீதிகள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

மாவீரர் தினத்தை மூன்னிட்டு கொழும்புத்துறை சனசமூக நிலையத்தினர், சிற்றூரவையினர்களும் இணைந்து கொழும்புத்துறை வீதி, கடற்கரைப் பகுதி ஓரங்களை மண் போட்டுச் சிரமதானப்பணி மூலம் செப்பனிட்டுத் திருத்தி அமைத்துள்ளனர்.

### வீதிக்கு மாவீரர் பெயர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோணந்தோட்டம் உதயதாரகை சனசமூக நிலையத்தில் முதல் நாள் தேசியக்கொடி வீரமரணம் அடைந்த சேரனின் சகோதரனுல் ஏற்றிவைக்கப்பட்டது.

சேரனின் நினைவாக அவர் பெயரில் 'சேரன் வீதி' என நிலையத்துக்கு முன்னுல் அமைந்துள்ள வீதிக்குப் பெயர்சூட்டப்பட்டது.

---

### முழங்காவிலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டுகளைப் போட்டன.

இக்குண்டுகள் மக்கள் குடியிருப்பில்லாத இடங்களில் விழுந்தமையால் சேதமெதுவும் ஏற்படவில்லை. (து)

### தாக்குதல்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தல் நடத்தப்பட்டதினுல் ஒருவரும் ஊர்காவற்றுறை இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினுல் இருவரும் காயமடைந்தனர்.

இரு தாக்குதல் ஈள் மத்தியிலும் ஆயிரக்கணக்கானமக்கள் இறுதிவரையும்இக்கூட்டத்தில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (வி)

# அஸாமில் ஜனாதிபதி ஆட்சி; தமிழகத்திற்கு இது எச்சரிக்கை

(புதுடில்லி)

அஸாம் மாநிலத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எந்த நிலையையும் சமாளிக்கும் விதத்தில் அங்கு இராணுவமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஊழல், பயங்கரவாதம், வன்முறை உட்பட பல குற்றச் சாட்டுகளின் பேரில் இந்திய அரசியல் சட்டம் 356ம் பிரிவின்படி நேற்று முன்தினம் இரவு அஸாம் ஆட்சிப் பொறுப்பு ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரம்பட்டது.

அஸாமில் சட்டம் ஒழுங்கு மிகப்பலவீனமடைந்துள்ளதாக கடந்த பல வருடங்களாக குற்றம் சட்டப்பட்டு வந்ததும் அங்கு பயங்கரவாதம் அதிகரித்திருந்ததும் ஆட்சி 'கவிழ்ப்பதற்கு அரசு தரப்பில் காரணம் காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டதால் வன்முறை, கலவரம் ஏதாவது ஏற்பட்டலாமெனும் அச்சத்தில் அரசு அலுவலகங்கள், பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அதிக அதிகாரம் அளிக்கப்பட்டு இராணுவமும் மாநிலத்தில் உஷார்படுத்தப் பட்டுள்ளது.

இதேவேளை அஸாமில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டமை தமிழகத்திலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென்றும் தமிழக அரசிற்கு இது ஒரு எச்சரிக்கையெனவும் அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

---

## சுன்னாகம் நோக்கி ஷெல் தாக்குதல்

(ஏழாலை - காங்கேசன்துறை)

சுன்னாகம் சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சீ-பிளேன் மற்றும் ஷெல் தாக்குதல்களினால் வீடுகள், கடைகள் சேதமடைந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்தனர்.

சுன்னாகம் சந்தைச் சுற்றுடலில் இரவு 8-00 மணியளவில் 3 தடவைகள் சுற்றிவந்த சீ-பிளேன், சரமாரியாகக் கலிபர் தாக்குதலை மேற்கொண்டதினால் அ. ரவிச்சந்திரன் (22 வயது) என்பவர் காயம் அடைந்தார்.

இதையடுத்து 8-20 மணியளவில் பலாலியில் இருந்து அடுத்தடுத்து 9 ஷெல்கள் சுன்னாகம் சந்திப் பகுதியை நோக்கி ஏவிவிடப்பட்டன.

பலத்த சத்தத்துடன் வீழ்ந்து வெடித்த ஷெல்களால் இருவர் காயமடைந்தனர். 3 வீடுகளும், 5 கடைகளும் சேதமடைந்துள்ளன.

சுன்னாகத்தைச் சேர்ந்த பா. ஜெகசோதி (வயது 44), ஜெயபானு (வயது 16), சி. சாந்தி (வயது 60) ஆகியோர் காயம் அடைந்தனர். (153-68)

---

தாக்குதல் மத்தியில்

## தீவுப் பகுதியில் நடந்த மாவீரர் வார கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சீ-பிளேன் மற்றும் ஷெல் தாக்குதல் மத்தியிலும் நேற்று முன்தினம் வேலணையில் சிறப்பான முறையில் மாவீரர்தின இறுதிநாள் கூட்டம் நடைபெற்றது.

தீவுப்பகுதி விடுதலைப்புலிகள் மகிகள் முன்னணிப் பொறுப்பாளர் சுதா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்களான ஆஞ்சநேயர், வரதன், தினேஸ், தீவுப்பகுதி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் சோபிகா உட்படப் பலர் உரையாற்றினர்கள்.

இக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது சீ-பிளேனில் இருந்து தாக்கு

(3-ம் பக்கம் பார்க்க)

---

### வவுனியாவில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுமுன்தினம் காலை 9 மணி முதல் 11 மணி வரை நான்கு பொம்மர் விமானங்கள், சாஸ்திரி கூழாங் குளம்) நொச்சிமோட்டை, பூந்தோட்டம், காத்தார் சின்னக்குளம், பேயாடி கூளாங் குளம், விளக்குவைத்தகுளம் ஆகிய பகுதிகளில் பொம்மர் தாக்குதல்களை நடத்தின.

இத் தாக்குதல்களைத் தொடர்ந்து இப்பகுதியிலுள்ள மக்கள் ஓமந்தைப் பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர். (வி-து)

---

குவைத்தில் தொழிலிழப்பு

## அரசிடம் நஷ்டஈடு கோரி 18,000 பேர் விண்ணப்பம்

(கொழும்பு)

குவைத்தில் தொழில் வாய்ப்புக்களை இழந்து நிர்க்கதியாகி இலங்கை திரும்பியுள்ள 18,000 பேர் அரசிடம் நஷ்டஈடுகோரி விண்ணப்பித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் எந்தப் பொருளையோ, பணத்தையோ குவைத்தில் இருந்து எடுத்து வர முடியாமல் வெறும்கையுடன் நாடு திரும்பியவர்களாவர்.

குவைத்தில் ஆயிரக்கணக்கான இலங்கையர்களது கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான பொருட்கள் கைவிடப்பட்டும் அவற்றை எடுத்து வர முடியாத நிலையிலேயே இவர்கள் நாடு திரும்பியதும் தெரிந்ததே. (ச)

---

### க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களது நலன் கருதி இந்த விசேட பரீட்சையை நடாத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என அறியக்கிடக்கிறது. (139)

---

## ஒய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியிலிருந்து இளைப்பாறிய உத்தியோகத்தர்களினதும், மரணித்த உத்தியோகத்தர்களினதும் மனைவிமாரினதும் ஒய்வூதிய வவுச்சர்கள் மக்கள் வங்கி யாழ். பிராந்தியத் தலைமை அலுவலகத்தை வந்தடைந்துள்ளன.

இவற்றுக்கு உரியவர்கள் மேற்படி அலுவலகத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளும்படி பிரதேச முகாமையாளர் வேண்டுகிறார்.

---

## ஹெலி தாக்குதலில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினமிரவு வேலணை பகுதியில் நடைபெற்ற ஹெலி தாக்குதலில் மாறன் (வயது 16), வித்தகன் (வயது 16) ஆகிய இருவர் காயமடைந்தார்கள். (153)

---

## வல்வையில் சீ-பிளேன் தாக்கி இருவர் காயம்

(வடமராட்சி)

வல்வையில் சீ-பிளேன் தாக்குதலால் இருவர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமுற்றன.

நேற்று முன்தினம் உடுப்பிட்டி, தொண்டமானாறு. வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய இடங்களில் சீ-பிளேனிலிருந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தில் திருமதி வெங்கடாசலம் நவரத்தினமாலை (வயது 76), எஸ். அந்தோனிப்பிள்ளை (வயது 46) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இத்தாக்குதல் நடைபெற்ற பகுதிகளில் பலரின் வீட்டுக் கூரைகள் பெரும் சேதமடைந்துள்ளன. (51)

---

### மதவாச்சியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கவும் அப்போது அங்கு ரோந்துவந்த பொலிஸார் குண்டர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து கலைத்ததாகவும் கூறப்படுகின்றது. (வி)

---

### 26,000

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வருடம் பெப்ரவரி மாதத்திலிருந்து குறிப்பிட்ட சான்றிதழுக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் பிறப்பு இறப்புப் பதிவுகாரர் பிரிவில் தேங்கிக்கிடக்கிறது

பிறப்பு இறப்புச் சான்றிதழ் படிவங்கல் இல்லாமையே இந்நிலை ஏற்பட்டுள்ளதாகப் பதிவுகாரர் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (137)

---

### ஒட்டுசுட்டானில்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

யிருப்புக்களை நோக்கி குண்டுத் தாக்குதலை நடத்தின.

இத்தாக்குதலினால் பொதுமக்கள் தரப்பில் 9 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதுடன், ஐவர் படுகாயமடைந்தனர். வீடுகள், ஆலயங்கள், பாடசாலைகள் சேதமடைந்தன.

மகாலிங்கம் பவா (27வயது) முள்ளியவளை) த. செல்வராசா (வயது 21) ஒட்டுசுட்டான்), விக்னேஸ்வரன் (23 வயது)புதுக்குடியிருப்பு, அருணசலம் (67 வயது), இவரது மகள் அ. கவிதா (12 வயது) மாங்குளம், த. சிவகரன் (18 வயது) ஒட்டுசுட்டான், சு. கவிதன் (வயது 23] ஒட்டுசுட்டான், வே. சிவரஞ்சினி (13 வயது) முள்ளியவளை, மகேந்திரன் (21 வயது)ஒட்டுசுட்டான் ஆகியோரே இச்சம்பவத்தில் இறந்தவர்களாவர்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மகாவித்தியாலயம் ஆகியவற்றின் கட்டடங்களும் இத்தாக்குதலினால் பலத்த சேதமடைந்தன. (வி-து)

---

### யாழ். மாவட்டத்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாறும் வயதினையுடைய உதவி அரசாங்க அதிபர்களான இந்த7பேரும் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவர்களை உடனடியாக திருகோணமலைக்கு வருமாறு மாகாண சபையால் யாழ் அரசாங்க அதிபருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (71)

---

### பிரிட்டிஷ்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஜோன் மேஜர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

47 வயதான திரு. ஜோன் மேயர் முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சரின் அன்புக்கு பாத்திரமானவர். இளைய வயதில் பிரதமராகும் முதல் அரசியல்வாதி. பெருங்கல்வி ஞானம்பெற்றவர், சிறப்பான குடும்பத்தில் பிறந்த தொழிலதிபர்.

இவரை - புதிய அமைச்சரவையை அமைக்குமாறு பிரிட்டிஷ் இளவரசி நேற்று அழைப்பு விடுத்தார். அமைச்சரவையில் எதிர்பார்க்கும் மாற்றங்கள் எதுவும் இருக்காதென ராஜதந்திரிகள் கூறியுள்ளனர். திரு. ஜோன் மூன்றுண்டுகள் மார்க்கிரட் தட்சரின் அமைச்சரவையில் இருந்ததும் தெரிந்ததே, (ச)

---

மாவீரர் தினத்தையொட்டி

## பண்டத்தரிப்பு ப. நோ. கூ. ச. பணியாளருக்குசம்பளஉயர்வு

(பண்டத்தரிப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் சகல பணியாளர்களுக்கும் விசேட சம்பள உயர்வு வழங்குவது என்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே தவறிழைத்த காரணத்தினால் சம்பள உயர்வுகள் நிறுத்தப்பட்ட ஊழியர்களுக்கு மாவீரர் நினைவாக மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்களுக்கு நிறுத்திவைக்கப்பட்ட சம்பள உயர்வுகளை மீண்டும் வழங்குவதென்றும் சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் சங்கப் பிரதேசத்தில் வறுமை நிலையிலுள்ள மறைந்த போராளி ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் சங்கத்தில் வேலை வாய்ப்பு வழங்குவதென்றும், வசதி குறைந்த நிலையிலுள்ள மாணவர் ஒருவரைத் தெரிவு செய்து, அவருக்குப் புலமைப் பரிசில் வழங்குவதென்றும் சங்க இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது. (72)

---

### நேர்மையான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் போராடுகின்றார்கள்: ஆனால் ஸ்ரீலங்கா அரசு அப்பாவி மக்களை கொன்று குவித்துவருகிறது.

அப்பாவித் தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்தி திறந்த மனதுடன் ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வருமானால் நாம் தயாராகவிருக்கிறோம்: இல்லையெனில் விடப்பிடியான போராட்டத்தின்மூலம் எமது மண்ணை மீட்டெடுப்போம்.

தமிழீழ மண் மீட்பிற்காக ஆயிரக்கணக்கான மாவீரர்கள் உயிர் நீத்துள்ளார்கள் அவர்களின் இலட்சியம் நிறைவேற்றப்படவேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து போராடுவதைத்தவிர வேறு வழியில்லை.

வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு: நகுலேஸ் தலைமையில் நடைபெற்ற இல்விழாவில் வடமராட்சி பொறுப்பாளர் சூசை; கவிஞர் புதுவை இரத்தினதுரை, எஸ். நடேசன், மரியதாஸ், அரசண்ணா உட்பட பலர் உரையாற்றினார்கள். (51)

---


## கண்ணீர் அஞ்சலி

கூட்டுறவுத்தந்தை அமரர் உயர் திரு.

சண்முகம் ஞானப்பிரகாசம்

இருந்தாலும் மறைந்தாலும் பேர் சொல்லவேண்டும்.
இவர் போல யாரென்று ஊர் சொல்ல வேண்டும்.
அன்னாரின் பிரிவினால் வாடும் குடும்பத்திற்கும் உறவினருக்கும்
ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கும்
கூட்டுறவுச் சங்கங்களின் பிராந்திய சபை
நல்லூர். (4155)


---


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு கார்த்திகை மாதம் 29-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under umber B/100306/81.